# தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்,
# கன்னியாகுமரி மாவட்ட மையம்.

**TAMIL NADU JUDICIAL EMPLOYEES ASSOCIATION**
**Kanniyakumari District Centre.**

(RECOGNISED AS PER G.O. M.S. No.1549 Public (Services A) Dated: 06.07.1967)


| PRESIDENT | SECRETARY | TREASURER |
|---|---|---|
| **K. Shanthi,** | **C.K. Benjamin Jose,** | **V. Sivakami,** |
| Sheristadar, | Head Clerk, | Head Clerk, |
| Chief Judicial | Principal District | Judicial Magistrate |
| Magistrate Court, | Munsif Court, | Fast Track Court, |
| Nagercoil. | Padmanabhapuram. | Eraniel. |
| **8754366350** | **7904574647** | **9600335985** |


08.05.2021 (சனிக்கிழமை) அன்று காணொளி மூலம் நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்ட நீதித்துறை ஊழியர் சங்க கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

1. தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட லாக் டவுன் உத்தரவின் படி நீதித்துறை மற்றும் நீதிமன்றங்கள் பணியை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவு படி நீதித்துறையை அத்தியாவசிய துறையின் கீழ் கொண்டு வந்து அத்தியாவசிய துறையில் பணிபுரிந்து கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண நிதியை நமது துறையில் தற்போது வரை தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நமது ஊழியர்களுக்கு வழங்க தமிழக அரசை மாண்புமிகு உயர்நீதிமன்றம் வலியுறுத்தி நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு படி 50 சதவீத ஊழியர்களை சுழற்சி முறையில் பணி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் சில குற்றவியல் நீதித்துறை நீதிமன்றங்களில் அனைத்து ஊழியர்களும் பணிக்கு வர உத்தரவிடப்பட்டிருந்தது. இச்சூழலில் ஊழியர்களை தொற்றிலிருந்து பாதுகாக்க 50 சதவீத பணி என்பதை அனைத்து நீதிமன்றங்களிலும் முறையாக செயல்படுத்த மாநில மையம் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட தீர்மானம் தொடர்பாக கடந்த சனிக்கிழமை மாநில மையம் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தை வலியுறுத்தி துரித நடவடிக்கை மேற்கொள்ள கோரிக்கை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது.

தலைவர் / செயலாளர்,
தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

பெறுநர்

மாநில தலைவர்/மாநில பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்,
சென்னை.